## வகுப்பு - 7 - பருவம் - 3 - புவியியல்

## 3. இயற்கை இடர்கள் - பேரிடர் மேலாண்மை நடவடிக்கைகளை புரிந்து கொள்ளல்

**பயிற்சி வினாக்கள்:**

1. பொருட்சேதம், உயிரிழப்பு மற்றும் சுற்றுச்சூழலால் பெரிய மாற்றத்தை நிகழ்த்தும் ஒரு இயற்கை காரணி ______.

   (1) இடர் (2) பேரிடர் (3) மீட்பு (4) மட்டுப்படுத்தல்

2. பேரிடரின் விளைவைக் குறைக்கும் செயல்பாடுகள் ______.

   (1) தயார் நிலை (2) பதில் (3) மட்டுப்படுத்தல் (4) மீட்பு நிலை

3. ஒரு திடீர் நகர்வு அல்லது புவி மேலோட்டின் திடீர் நடுக்கம் ______ என அழைக்கப்படுகிறது.

   (1) சுனாமி (2) நிலச்சரிவு (3) நிலநடுக்கம் (4) சூறாவளி

4. கனமழையினால் திடீரென அதிக நீர் வெளியேறுதல் ______ என அழைக்கப்படுகிறது.

   (1) வெள்ளம் (2) சூறாவளி (3) வறட்சி (4) பருவ காலங்கள்

5. ______ வைத்துள்ளோரை வாகனம் ஒட்ட அனுமதித்தால் சாலை விபத்தினைத் தவிர்க்கலாம்.

   (1) ரேஷன் அட்டை (2) ஒட்டுநர் உரிமம் (3) அனுமதி (4) ஆவணங்கள்

6. பொருத்துக

| | | |
|---|---|---|
| 1) புவி அதிர்ச்சி | - | (a) கவனமின்மை |
| 2) சூறாவளி | - | (b) பிளவு |
| 3) சுனாமி | - | (c) புயலின்கண் |
| 4) தொழிற்சாலை விபத்து | - | (d) இராட்சத அலைகள் |

LIVEWORKSHEETS

(1) 1 - a 2 - b 3 - c 4 - d

(2) 1 - b 2 - c 3 - d 4 - a

(3) 1 - d 2 - c 3 - b 4 - a

(4) 1 - c 2 - d 3 - a 4 - b

7. அவசர கால மருத்துவ உதவிக்கு அழைக்க வேண்டிய எண் _______.

(1) 100 (2) 101 (3) 108 (4) 1078

8. தீ விபத்திற்கு அழைக்க வேண்டிய எண் _______.

(1) 101 (2) 100 (3) 1078 (4) 108

9. சுனாமி என்னும் சொல் _______ மொழிச் சொல்.

(1) பானிய (2) ஜப்பானிய (3) ஆங்கில (4) கிரேக்க

10. நிலநடுக்கத்தை பதிவு செய்யும் கருவி _______.

(1) சிஸ்மோகிராப்

(2) வெர்னியர் அளவுகோல்

(3) பாராமானி

(4) வெப்பநிலைமானி

11. உலகிலேயே மிக அதிக அடர்த்தியான நிலநடுக்கப் பகுதி _______.

(1) இந்தோனேசியா (2) இந்தியா (3) அமெரிக்கா (4) ஜப்பான்

12. உலகிலேயே மிக அதிக நிலநடுக்கங்கள் ஏற்படுவது _______.

(1) ஜப்பான் (2) இந்தியா (3) சீனா (4) இந்தோனேசியா

13. சுனாமிக்கு காரணமான செயல் இல்லாதது எது?

(1) நிலநடுக்கம்

(2) நிலச்சரிவு

(3) எரிமலைவெடிப்பு

(4) புயல்

14. போபால் விஷ வாயு கசிவு விபத்து _______ பேரிடர்.

(1) தீவிபத்து

(2) தொழிற்சாலை விபத்து

(3) சுனாமி

(4) நிலநடுக்கம்

15. பொருந்தாததைத் தேர்ந்தெடுக்க.

(1) நிலநடுக்கம் (2) சுனாமி (3) பனிச்சரிவு (4) போர்

LIVEWORKSHEETS

16. பொருந்தாததைத் தேர்ந்தெடுக்க.

(1) கூட்ட நெரிசல் (2) தீவிரவாதம்

(3) தொழிற்சாலை விபத்து (4) சுனாமி

17. தமிழ்நாட்டை சுனாமி தாக்கிய ஆண்டு ______.

(1) 2008 (2) 2004 (3) 2018 (4) 2014

18. NDMA என்பது ______.

(1) தேசிய பேரிடர் மீட்பு படை (2) தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம்

(3) தேசிய மீட்பு படை (4) தேசிய இடர் மேலாண்மை நிறுவனம்

19. தமிழ்நாட்டை கஜா புயல் தாக்கிய ஆண்டு ______.

(1) 2001 (2) 2011 (3) 2008 (4) 2018

20. 2004 சுனாமிக்குப் பிறகு தமிழகத்தைத் தாக்கிய மிக மோசமான புயல் ______.

(1) நிஷா (2) வர்தா (3) ஒக்கி (4) கஜா

21. கூற்று (A): நவீன உலகத்தில் அனுதினமும் மகிழ்ச்சியாக வாழ முடியாது

காரணம் (R): மாசடைதல் மற்றும் சுற்றுச்சூழல் சீரழிவின் காரணமாக இயற்கை இடர் மற்றும் பேரிடரைச் சந்தித்துக் கொண்டிருக்கிறோம்.

(1) கூற்று மற்றும் காரணம் சரி, கூற்று காரணத்தை விளக்குகிறது.

(2) கூற்று மற்றும் காரணம் சரி, கூற்று காரணத்தை விளக்கவில்லை.

(3) கூற்று தவறு காரணம் சரி.

(4) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

22. கூற்று (A): திடீர் நகர்வு அல்லது பூமியின் மேலோட்டில் ஏற்படும் நடுக்கம் புவி அதிர்ச்சி ஆகும்.

காரணம் (R): டெக்டானிக் தட்டுகளின் நகர்வு, பிளவு போன்றவை புவி அதிர்ச்சிக்குக் காரணமாகின்றன.

(1) கூற்று, காரணம் சரி மற்றும் கூற்று காரணத்தை விளக்குகிறது.

(2) கூற்று, காரணம் சரி, கூற்று காரணத்தை விளக்கவில்லை.

LIVEWORKSHEETS

(3) கூற்று தவறு காரணம் சரி.

(4) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

23. கீழ்க்காண்பனவற்றில் ஒன்று பேரிடரைப் பொருத்தமட்டில் முதன்மை மீட்பு குழு இல்லை.

(1) காவலர்கள் (2) தீயணைப்புப் படையினர்

(3) காப்பீட்டு முகவர்கள் (4) அவசர மருத்துவக்குழு

24. வெள்ளப்பெருக்குக் காரணம் இல்லாத செயல் எது?

(1) கனமழை (2) புயல் (3) நிலச்சரிவு (4) சுனாமி

25. கீழ்க்காணும் சொற்றொடர்களில் எது நிலநடுக்கத்தை எதிர் கொள்வதோடு தொடர்புடையது?

(1) காவல் துறை மற்றும் பாதுகாப்புப் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் பகுதிக்கு செல்லவேண்டாம்.

(2) கடல் மட்டத்திலிருந்து உங்கள் தெரு எவ்வளவு உயரத்தில் உள்ளது மற்றும் கடலோரத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் அமைந்துள்ளது எனத் தெரிந்து கொள்ளவும்

(3) கண்ணாடிச் சன்னல், வெளிக்கதவுகள், சுவர், எளிதில் விழக்கூடிய தொங்கு மின்விளக்குகள் மற்றும் மரச்சாமான்கள் போன்றவற்றிலிருந்து விலகியிருக்கவும்.

(4) கதவைத் திறப்பதற்கு முன்பு புறங்கையால் கதவைத் தொட்டு வெப்பமாக உணர்ந்தால் கதவைத் திறக்க வேண்டாம்.

26. நிலநடுக்கம், சுனாமி மற்றும் எரிமலை வெடிப்புகள் ______ இல் ஏற்படும் இயற்கை பேரிடராகும்.

(1) புவி உட்பகுதி (2) புவி மேற்பரப்பில்

(3) வானிலை ஆய்வு / நீர் வளம் (4) சுகாதாரம்

27. நிலச்சரிவு மற்றும் பனிச்சரிவு ______ ஏற்படும் இயற்கை பேரிடராகும்.

LIVEWORKSHEETS

(1) புவி உட்பகுதி
(2) புவி மேற்பரப்பில்
(3) வானிலை ஆய்வு / நீர் வளம்
(4) சுகாதாரம்

28. புயல் காற்று, சூறாவளி, பனிமழை மற்றும் வெள்ளம் ஆகியவை _______ல் ஏற்படும் இயற்கை பேரிடராகும்.

(1) புவி உட்பகுதி
(2) புவி மேற்பரப்பில்
(3) வானிலை ஆய்வு / நீர் வளம்
(4) சுகாதாரம்

29. கீழ்க்கண்டவற்றுள் எது மனிதனால் உருவாகும் பேரிடர்?

(1) சமூக தொழில்நுட்பம்
(2) போர்
(3) இரண்டும்
(4) எதுவுமில்லை

30. நிலநடுக்கத்திற்கு காரணம் _______.

(1) புவித்தட்டுகளின் நகர்வு
(2) நிலச்சரிவு
(3) மேற்பரப்பில் பிளவு
(4) அனைத்தும் சரி

31. நிலநடுக்கத்தால் ஏற்படுவது _______.

(1) வெள்ளம், சுனாமி, நிலச்சரிவு
(2) தீ, மின்சாரம் துண்டிக்கப்படுதல்
(3) நீர்க்குழாய்கள் உடைதல்
(4) அனைத்தும்

32. போபால் விஷவாயு கசிவு ஏற்பட்ட ஆண்டு _______.

(1) 1983
(2) 1985
(3) 1984
(4) 1986

33. பேரிடர் மேலாண்மை ஆணையம் (NDMA) _______ அமைச்சகத்தின் கீழ் வரும்.

(1) பாதுகாப்பு
(2) உள்துறை
(3) வெளியுறவுத் துறை
(4) போக்குவரத்து

34. SDRF என்பது _______ போலீஸ் தனிப்படையுடன் அமைக்கப்பட்டது.

(1) 50
(2) 60
(3) 70
(4) 80

35. பொருத்துக.

LIVEWORKSHEETS

i. நிஷா - (a) 2020

ii. வர்தா - (b) 2018

iii. நிவர் - (c) 2016

iv. கஜா - (d) 2008

(1) i - a ii - b iii - d iv - c

(2) i - c ii - d iii - b iv - a

(3) i - d ii - a iii - c iv - b

(4) i - d ii - c iii - a iv - b

LIVEWORKSHEETS